மூலவர் தபால்
தொலைத்தொடர்புகளுக்கு நம்பிக்கையான
ஒரே இடம்:
மிதுஷா
சயில் நிலைய வீதி,
வவுனியா.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

24 மணி நேர
தொலைத்தொடர்பு சேவைகளுக்கு
நம்பிக்கையான இடம்:
மிதுஷா
புதிய பஸ் நிலைய கட்டடம்,
வவுனியா.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 17 சனிக்கிழமை (30 04 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 153

# தமிழீழ மக்களின் தேசிய எழுச்சியை பிரதிபலிக்கும் மேதின விழா நாளை

## பேரணியில் அணிதிரள அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 30

நாளை நடைபெறவிருக்கும் மே தின எழுச்சிப் பேரணியில் சகல துறைகளையும் சேர்ந்தவர்களை அணிதிரண்டு பங்குபற்றுமாறு பல பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

சீமெந்துத் தொழிற்சாலையின் சகல ஊழியர்களையும் நாளை நண்பகல் 12 மணிக்கு மருதனார்மடம் சந்தியில் கூடுமாறு காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேரணியில் கலந்துகொள்ள வசதியாக சகல வங்கி ஊழியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லா பகுதிகளில் இருந்தும் பேரணிகள், ஊர்திப் பவனிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

உலகத் தொழிலாளர் நாளான மே தினத்தை ஒட்டி நாளை யாழ்ப்பாணத்தில் மாபெரும் எழுச்சிப் பேரணியும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

மருதனார்மடம் சந்தியில் இருந்து நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் மே தினப் பேரணி யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானம் வரை இடம்பெறும், பின்னர் அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

நாளைய மே தினப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் லட்சக்கணக்கான மக்கள் அணிதிரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் வசதி கருதி பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம் முறை மேதினப் பேரணியில் மக்கள் கோட்ட, வட்ட ரீதியாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

கோட்ட, வட்ட ரீதியாக வரும் பேரணிகளும், ஊர்திகளும் அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்று சேரும். பின்னர் மருதனார்மடம் சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் பிரதான பேரணியில் அவை இணைந்து கொள்ளும்.

கோட்ட மற்றும் வட்ட ரீதியாக மக்களும், ஊர்திகளும் ஒன்று சேரும் இடங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

✱ வடமராட்சி கோட்டம் (பருத்தித்துறை [illegible] உட்பட) — கன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலடி.

✱ தென்மராட்சிக் கோட்டம் — உரும்பராய் ஞானவைரவர் கோவிலடி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'நரோமா' கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது

### பதிலாக 3 ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 30

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் இணைப்புக் கப்பல் வசதி இல்லாததால் "நரோமா" கப்பல்சேவை இன்று நடைபெறமாட்டாது.

கொழும்பில் இருந்து இன்று புறப்படவுள்ள 'கோமாரி' கப்பல் பருத்தித் துறையை வந்தடைந்ததும்—

'நரோமா' கப்பல் சேவை எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறும் என யாழ். அரச அதிபருக்கு நேற்று கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

"நரோமா" கப்பல் மூலம் இன்று திருமலை செல்வதற்காகப் பெயர்களைப் பதிவு செய்த பயணிகள் எதிர்வரும் 3 ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து புறப்பட ஏற்பாடாகியுள்ளது. பயணிகள் அனைவரையும் அன்று நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறை துறைமுக நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-5)

## கோமாரி வருகிறது

யாழ்ப்பாணம், ஏப். 30

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் கொழும்பில் இருந்து இன்று வடக்கு நோக்கிப் புறப்படும் என யாழ். அரச அதிபருக்கு நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-5)

### தமிழகக் கடலோரத்தில் உள்ள

## ஏழு கடற்படைப் பிரிவுகளை மூடிவிட மத்திய அரசு முடிவு

### வேண்டாம் என ராவிடம் ஜெயலலிதா அவசர கோரிக்கை

விடுதலைப் புலிகள் மற்றும் அந்நிய சக்திகள் நாட்டுக்குள் ஊடுருவாமல் தமிழக (கடற்கரையோரங்களில் ஏழு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்திய கடற்படைப் பிரிவுகளை, விலக்கிக் கொள்ள வேண்டாம் என்று இந்தியப் பிரதமரை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று சட்டப் பேரவையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மே முதலாம் திகதிக்குப் பின்னர் 7 கடற்படைப் பிரிவுகள் விலக்கிக் கொள்ளப்படும் என்றும்—

இப்பிரிவுகளின் ரோந்துப் பணி நிறுத்தப்படும் என்றும்—

தமக்குத் தெரிய வந்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

"இது மிகவும் கவலைதரும் செய்தி விடுதலைப் புலிகள் மற்றும் தேசவிரோத சக்திகள் நாட்டுக்குள் ஊடுருவாது தடுப்பதற்காக— கடற்படைப் பிரிவுகளை விலக்கிக் கொள்ளும் முடிவை மத்திய அரசு வாபஸ் பெறவேண்டும்.

"மேலும் புதிதாக இரண்டு கடற்படைப் பிரிவுகளை மத்திய அரசு தமிழகத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இந்தியாவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் கருத்தில் கொண்டு எனது கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொள்ள வேண்டும்." —இப்படி முதலமைச்சர் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

### சுப்பிரமணியசுவாமி தொடர்ந்த வழக்கில்

## தமிழக ஆளுநர், முதல்வர் இருவருக்கும் நோட்டீஸ்!

சென்னை, ஏப். 30

ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்திருந்த ரிட் மனு தொடர்பாக ஆளுநர் எம். சென்னா ரெட்டி, முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தலைமைச் செயலர் டி. வி. வெங்கட்ராமன் ஆகியோருக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று நோட்டீஸ் அனுப்பியது.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக செல்வி ஜெயலலிதா மீது வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி அளிக்க வேண்டும் என்று சுவாமி தமது மனுவில் கேட்டுக் கொண்டிருந்தார்.

கடந்த நவம்பரிலும், இந்த ஆண்டு பெப்ரவரியிலும் ஜெயலலிதாவுக்கு எதிராக ஆளுநரிடம் தான் கொடுத்திருந்த இரண்டு மனுக்கள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்றும்—

ஆனால் மார்ச் மாதம் முதலாம் திகதி தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கொடுத்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை பிரதமரிடம் ஆளுநர் அனுப்பியிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆளுநர் தமது மனு மீது நடவடிக்கை எடுக்காததால் அரசமைப்பு சட்டத்தின் கீழான தனது கடமைகளை செய்யத் தவறி விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சுவாமியின் வாதங்களைக் கேட்ட நீதிபதி ஜே. கனகராஜ் ஜூன் 14 ஆம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்டவர்கள் மூவரையும் பதில் அளிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா மீது ஊழல் வழக்குத் தொடர ஏன் அனுமதி வழங்கக் கூடாது என்பதற்குக் காரணம் [illegible] மூவரையும் நீதிமன்றம் கேட்டுள்ளது. (த)

## பிரபாகரனுடன் மட்டுமே பேச முடியும்; அதுவும் நமது நிபந்தனைகளுடனேயே!

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 30

★ விடுதலைப் புலிகளுடனான எந்தவொரு சமாதானப் பேச்சிலும் அதன் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கலந்துகொள்ள வேண்டும்.

★ அதற்கு முன்னர் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் அனைத்தையும் உடனடியாக அரசாங்கம் விதித்திருக்கும் சகல நிபந்தனைகளையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

— இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்திருப்பதாக உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலியின் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

★ புலிகளுடன் இனிமேல் நடைபெறும் பேச்சுக்களின் போது தமிழ் மக்களின் சகல தரப்பினரும் பங்குபற்ற வேண்டும்.

★ பேச்சுவார்த்தையில் பேசி கலந்தாலோசிக்கப்படவுள்ள விடயங்கள் பற்றி மக்களுக்கு முன்னரே தெரிவித்து, மக்கள் மனதில் அது குறித்து எழக்கூடிய பீதியைப் போக்க வேண்டும்.

— இவ்வாறு ஜனாதிபதி விஜேதுங்கா மேலும் தெரிவித்ததாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டதாவது:-

விடுதலைப் புலிகள் போர் தொடுக்கும் இடத்தில் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் புலிகள் அதை இடையில் நிறுத்தி, வன்முறையில் ஈடுபடுவதால் அரசாங்கம் நிபந்தனைகள் தொடர்பாக தனது நிலையில் உறுதியாக உள்ளதாக அச்செய்தியில்

[6ஆம் பக்கம் பார்க்க]

### பொலீஸாருக்கு மேலதிகமாக

## பொதுமக்களின் பாதுகாப்பு வளையம் எதிரணியினரின் மேதினக் கூட்டத்தில்!

கொழும்பு, ஏப். 30

பொதுசன ஐக்கிய முன்னணி நாளை கொழும்பில் நடத்தவிருக்கும் மேதினக் கூட்டத்திற்கு பொலீஸாரால் வழங்கப்படும் பாதுகாப்புக்கு மேலதிகமாக பொதுமக்கள் பாதுகாப்பு வளையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முன்னணியின் செயலாளர் ரி. எம். ஜயரத்தின நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

தாங்கள் மேற்கொள்ளும் பாதுகாப்பு ஒழுங்குகள் மூலம், மேதினக் கூட்டத்திற்கு வருகை தரும் தலைவர்களுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும்—

கூட்டத்தைக் குழப்ப அல்லது வன்செயலில் ஈடுபட முனைபவர்கள் தமது பாதுகாப்புப் பிரிவினரால் இனங்காணப்படுவர் என்றும்—

ஜயரத்தின மேலும் தெரிவித்தார். (உ-6)

### எதிரணியுடன் மே தினத்தில் தோன்றும்

## சிறிமானி சு.கவில் நாளை இணைவார்?

மணிலா, ஏப். 30

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் மனைவி சிறிமானி நாளை எதிர்க்கட்சியான ஸ்ரீ ல. சு. கட்சியில் சேர்ந்துகொள்ளவுள்ளதாக சில வட்டாரங்கள் கூறுவதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இதற்கிடையில்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நாளை கொழும்பு சம்பெல் பூங்காவில் நடைபெறும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பங்குபற்றும் என ஜ. ஐ. தே. முவின் (லலித் பிரிவு) தலைவியான சிறிமானி அறிவித்திருக்கிறார்.

எனினும்—

வடமத்திய மாகாண முதலமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திர தலைமையிலான ஜ. ஐ. தே. மு. பிரிவினர், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பாப்பரசர் விழுந்து கால் எலும்பில் முறிவு

மணிலா, ஏப். 30

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்று வத்திக்கானில் உள்ள தமது இல்லத்தில் குளியலறையில் இருந்து வெளியே வந்த சமயம் வழுக்கி விழுந்தார். இதனால் அவரது கால் எலும்பு முறிந்தது.

கால் எலும்பு முறிவை சரி செய்யும் அறுவைச் சிகிச்சையை நேற்றிரவு அவருக்குச் செய்ய வைத்தியர்கள் தீர்மானித்திருந்தனர்.

73 வயதான திருத்தந்தை கடந்த நவம்பரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது முதல் அவரது உடல் நிலை சற்றுப் பலவீனமாக இருந்து வருவதாக செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் பாப்பரசர் இவ்வாறு விழுந்து காயமடைந்தது இத்தோடு இரண்டாவது தடவையாகும்.

முதல் தடவை விழுந்த போது அவரது தோளில் முறிவு ஏற்பட்டது.

சிசிலி நாட்டுக்கு முன்பு நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருந்த சமயம் அவர் நேற்று குளியலறையில் விழுந்தார்.

பரிசுத்த பாப்பரசர் அடுத்த ஆண்டு ஜனவரியில் கொழும்பு வருவதற்குத் திட்டமிட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ-5)

## பல லட்சம் பேர் நாளை திரள்வர்

கொழும்பு ஏப். 30

ஸ்ரீ. ல. சு. க. தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பல லட்சம் மக்கள் திரளுவார்கள் என கொழும்பு கண்டபீடுகள் தெரிவித்தன.

ஆளும் ஐ. தே. க. இம்முறை கொழும்பில் மேதினக் கூட்டத்தையோ, பேரணியையோ நடத்தவில்லை என்பது தெரிந்ததே. (உ)

## அரசியல் ஸ்திரமற்ற நிலையினால் கொழும்பு பங்குச் சந்தையில் வீழ்ச்சி!

லண்டன், ஏப். 30

கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகளில் திடீரென வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நாட்டின் அரசியலில் ஏற்பட்டிருக்கும் நிச்சயமற்ற நிலையும் அதற்கு ஒரு காரணம் எனப் பங்குச் சந்தை வட்டாரங்கள் கூறுகின்றன.

உலகத் தரத்தோடு ஒப்பிடும் போது இலங்கையின் பங்குச் சந்தை மிகச் சிறியது. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னர், அது உலகச் செய்தித் தாள்களின் தலைப்புகளை எட்டிப் பிடித்தது. அதற்குக் காரணம் 6 மாத காலமாக இந்தச் சிறிய பங்குச் சந்தை தொடர்ந்து விரிவடைந்து வந்ததும், உலகின் அதியுச்ச வளர்ச்சியைக் காட்டும் பங்குச் சந்தையாக அது மாறியதுமே ஆகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கைப் பொருளாதாரம் கண்ட வளர்ச்சி வீத அளவும் அரச தனியார் மயமாக்கலில் காட்டிய உறுதிப்பாடும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தன.

பெப்ரவரி மாத தொடக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்ப அட்டை திருத்துவதற்கு கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30

குடும்பப் பதிவு அட்டை திருத்தம் செய்வதற்கு— பொதுமக்களின் வசதி கருதி— கால எல்லை ஜூலை 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக [illegible] நிர்வாகப் பிரிவின் குடும்ப [illegible] அறிவித்துள்ளனர். (உ)

## கோபாலசாமியின் உயிருக்கு ஆபத்து!

### பாதுகாப்புக் கேட்கிறார் பாஸ்வான்

தி. மு. கவின் ஒரு பிரிவுத் தலைவரான வை. கோபாலசாமியின் உயிருக்கு ஆபத்து இருப்பதால் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் போதிய பாதுகாப்பளிக்க மத்திய உள்துறை அமைச்சரும், தமிழக முதல்வரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனதா தள கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. ராம்விலாஸ் பாஸ்வான் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வை. கோ. அணியின் மாவட்டச் செயலாளர் ஏழு பேர் அண்மையில் கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்து திரு. பாஸ்வான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கையை அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## படகுச் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 30

இன்று வழமையான நேரத்தில் நடைபெறவிருந்த கிளாலி —பூநகரி படகுச் சேவை தவிர்க்க முடியாத காரணங்களினால் நடைபெறமாட்டாது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயன் L. றேமன் முத்தையா
(District Chairman - Leos)
அவர்களின் ஞாபகார்த்தமாக
யா / பரியோவான் கல்லூரி
லியோ கழகம்
நடத்தும்
இரசிகர்களின்
அபிமான கிரிக்கெட் நட்சத்திரம்
தெரிவுப் போட்டி - 1994

இறுதி முடிவுகள் வருமாறு:

1) கேதீஸ்வரன் (கொ.இ.க.) - 492
2) தணிகேஸ்வரன் (கொ.இ.க.) - 456
3) விமலன் (ப.யோ.க.) - 398
4) சுரேஸ் (யா.ம.க.) - 236
5) ரங்கன் (கொ.இ.க.) - 196

— லியோ கழகம்
யா / பரியோவான் கல்லூரி

விளம்பர அன்பளிப்பு:
பி. ஜ. பெர்னாண்டோ
இல. 542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7975)


## ஆலயங்களில்

வடமராட்சி கிழக்கு தாளையடி புனித சவேரியார் தேவாலய நவநாள் உற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

இன்று திருநற் கருணை ஆராதனையும் நாளை திருப்பலி பூஜையும் இடம்பெறும். (த-117)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் கோயில் பஞ்சகுண்ட யாக மஹோற்சவம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

உற்சவ நாட்களில் தினமும் இரவு 7.30 மணிக்கு சமய சுபருரையும் 8.30 மணிக்கு சங்கீத இசை விருந்தும் இடம்பெறும். (த-89)

★ ★ ★

இணுவில் — கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியம் சுவாமி கோயில் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை மறுதினம் திங்கள் காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு பூங்காவனமும் நடைபெறும். (ஓ-51)

# போருக்கு முடிவு காணாத தளபதிகளுக்குபதவியுயர்வா?

## நாடாளுமன்றில் தினேஷ் கேள்வி

வடக்கு- கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாத இராணுவத் தளபதிகள் எல்லோரும் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களாக நியமிக்கப்படுகின்றார்கள்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாகவே அவசர காலநிலை நீடிக்கப்படுவதாக அரசு அடிக்கடி கூறிவருகின்றது. அவசரகாலநிலைநீடிப்பு யுத்த முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதா? கொப்பேகடுவையின்மறைவின் பின்னர் போர் முறையில் மாற்றம் ஏற்படவில்லை.

படைகளின் முக்கிய பிரிவுகளுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவல் செய்துள்ளார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயமாகும். படையினரிடம் கொள்கை இல்லாததால் தான் விடுதலைப் புலிகள் வெற்றியடைகின்றார்கள்'' என்று அவர் கூறினார். (த-எ)

## மாகாணசபை கூட்டத்திற்கு

# ஆயுதங்கள்,தொலைபேசி எடுத்து வருவதற்கு தடை

துப்பாக்கிகள், வேறு ஆயுதங்கள் மற்றும் செல்லுலர் தொலைபேசிகள் போன்றவற்றுடன் மாகாணசபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்று மேல் மாகாண சபை உறுப்பினர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாகாணசபையின் அவைத் தலைவர் ஆரியரத்தின ஜயதிலக விடுத்த உத்தரவில் —

மாகாணசபைக் கூட்டம் நடைபெறும் சமயம் சபை உறுப்பினர்கள் தமது சொந்த மெய்ப் பாதுகாவலர்கள் மற்றும் விருந்தினர்களை கூட்டம் நடைபெறும்மண்டபத்துக்குள் அழைத்து வரக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை —

மேல் மாகாணசபையின் கூட்ட மண்டபத்துக்கு கூட்டம் நடைபெறும் போது வரும் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பொலிஸாரினால் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாகாணசபை அவைத் தலைவரின் உத்தரவின் மீது இச் சோதனையைபொலிஸார் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

# நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக வை. கோ. மேன்முறையீடு

மணிலா, ஏப். 30

தி. மு. கவின் பெயர், கொடி என்பவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்ற இடைக்காலத் தடையை நீக்கக் கோரி வை. கோபாலசாமி தாக்கல் செய்திருந்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் கடந்த செவ்வாயன்று தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து —

வை. கோபாலசாமி எம். பி. உட்பட அவரது அணியைச் சேர்ந்த 11 பேர் தனி நீதிபதியின் தீர்ப்புக்கு தடைகோரி கடந்த புதனன்று அப்பீல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்

(மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)


நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்
மே 1 அனைத்துலக
தொழிலாளர் தினம்

நல்லூர் பிரதேசத்தில் உள்ள அனைத்து வர்த்தகர்களையும் மே தினத்தை முன்னிட்டு 01-05-1994 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலி சந்தியில் அணிதிரளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

எமது உரிமைகளை வென்றெடுக்கவும், எமது எழுச்சியை உலகத்துக்கு எடுத்துக் காட்டவும் அனைத்து வர்த்தகர்களும் தவறாது இதில் கலந்துகொண்டு மே தினப் பேரணியை சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி

நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்
(சி/7971)



காவேரி சியாக்காய் பவுடர் வாங்கும்
வர்த்தகர்களுக்கு
முக்கிய அறிவித்தல்

ஆரம்பத்தில் காவேரி சீயாக்காய் பவுடரை லைசக்கில் விற்பனை செய்த விற்பனையாளர் தற்போது வேறு சீயாக்காய்ப் பவுடரை காவேரி சீயாக்காய் பவுடர் என்றும், பெயர் தான் மாற்றம் என்றும் விற்பனையில் மோசடி செய்து வருவதாகப் பல வர்த்தகர்கள் எமக்கு முறையிட்டுள்ளார்கள். ஆகையால் நீங்கள் வாங்கும் சீயாக்காய் பவுடர் பக்கற் காவேரி தானா என்று லேபிலை அவதானித்து வாங்கவும்.

பாவனையாளர்களுக்கும் இதனை அறியத்தருகின்றோம்.

காவேரியின் தரம் நிரந்தரம்
கந்தசாமி அன் சன்ஸ்
இல. 15, ஆடிய பாதம் வீதி, கல்வியன்காடு
(30679)



கடை
வாடகைக்கு

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. ஸ்தாபனக் கட்டடத்தில் (கச்சேரி அருகில்) உள்ள கடை 01-05-94 தொடக்கம் வாடகைக்கு விடப்பட இருக்கிறது. இதனை எடுத்து நடத்த விரும்புகிறவர்கள் வை. எம். சி. ஏ. பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வை. எம். சி. ஏ.,
பொதுச் செயலாளர்.
[சி-7965]


# சங்கீதபாட செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களுக்கான — சங்கீதப் பாடநெறி சேவைக் காலப் பயிற்சி வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

இன்று முதல் நடைபெற விருந்த இந்த வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பது குறித்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு கடந்த 27 ஆம் திகதியன்றே அறிவிக்கப்பட்டு விட்டதாக மேற்படி இருகோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் புலந்திரன் தெரிவித்தார். (உ)

# விளையாட்டு நிகழ்வுகள்

ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டித் தொடர்களில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

மென்பந்து கிரிக்கெட்

★ காலை 9.00 மணி:- நொதேண் வி. க. எதிர் வீனஸ் வி. க.

★ பிற்பகல் 3.00 மணி:- நிலாவெளி வி. க. எதிர் அளவெட்டி வி. க.

கரப்பந்தாட்டம் (ஓவர்)

★ பிற்பகல் 2 30 மணி:- ஆவரங்கால் ம. வி. க. எதிர் சிவன் இளைஞர் வி. க. 'பி'

★ ★ ★

களவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 00 மணி:- மயிலிட்டி கண்ணகி வி. க எதிர் விநாயகர் ஐக்கிய வி. க

★ 4.00மணி:- அறிவொளி வி. க. எதிர் நாவாந்துறை கலைவாணி வி. க.

டொனால்ட் கணேஷ்குமார் ஞாபகார்த்தமாக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் — 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து பற்றிஷன் அணி மோதும்

இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் (உ)

★ ★ ★

ஷப்றா வி. க. அணிக்கும் மானிப்பாய் பரீஷ் வி. க அணிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் — ஒரு நாள் — சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ)


சீமெந்து பொதுத் தொழிலாளர்
யூனியன்
மேதின ஊர்வலம்
ஊழியருக்கு அழைப்பு

மேதின ஊர்வலம் ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு மருதனார்மடம் சந்தியிலிருந்து ஆரம்பமாக இருப்பதால் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரையும் தவறாது நண்பகல் 12 மணிக்கு மருதனார்மடம் சந்திக்கு வந்து கூடுமாறு காங்கேசன் சீமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன் அழைப்பு விடுக்கின்றது. மருதனார்மடத்தில் ஊர்வலம் ஆரம்பமாகும் இடத்திலிருந்து சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் வர்ணம் தீட்டப்பட்ட ஊர்தியுடன் கூட்டம் நடைபெறும் மைதானத்திற்கு ஊர்வலமாகச் செல்வார்கள். ஆகவே சகல தொழிற்சாலை ஊழியர்களும் ஊர்வலத்தில் கலந்து மேதினத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

(30681)



BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்

புதிய பிரிவு | 94 O/L
DAY CLASS

எமது வழமையான ஆசிரிய குழுவினால்

ஆரம்பம்: மே 2ல் திங்கள் காலை 8-00

விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்

[சி-7966]



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை
முழுநேர
பட்டப்பின் கல்வித்
தகைமை
கற்கை நெறி
1993/94
புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1994 - 05 - 27 இல் 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெறவிருப்புவோர், நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்

அனுமதிப் பரீட்சை 1994 - 07 - 24 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1994 - 05 - 27 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
விஞ்ஞான பீடப்
பரீட்சைகள்

முதலாம் அரையாண்டு இரண்டாம் வருடப் பரீட்சை 1994-5-9 இலும் மூன்றாம் வருடப் பரீட்சை 1994-5-12 இலும் ஆரம்பமாகும்.

- பதிவாளர்
(சி-7970)



மேதின பேரணிபற்றிய அறிவித்தல்
வங்கி ஊழியர்களுக்கு

மேதின பேரணியில் கலந்து கொள்வதற்கு வசதியாக சகல வங்கி ஊழியர்களும் 01- 05- 94 மதியம் 12-00 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி முன்பாக ஒன்று கூடவும். மானிப்பாய் வீதி வழியாக சகல வங்கி ஊழியர்களும் உடுவில் மகளிர் கல்லூரி சென்றடைந்து பேரணியில் கலந்து கொள்ளலாம்.

(30680) செயற்குழு வங்கி ஊழியர் ஒன்றியம்



மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

ஆவரங்கால் மத்திய வி. க. வளர்ச்சி நிதிக்காக மத்திய வி. க. நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி.

இடம்:- ஆவரங்கால் சவாரி மைதானம்,
காலம்:- 07 - 05 - 1994 பிற்பகல் 2 மணி
பிரவேசம் ரூபா 10/-

மத்திய வி. க.
ஆவரங்கால்.
(30678)



கூட்டுறவாளர்களே ஒன்றிணைவீர்

உழைக்கும் மக்களின் உரிமைக் குரல் கொடுக்கும் மே தினத்தில் (1-5-1994) அனைத்து கூட்டுறவுச் சங்கங்களினதும் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், தலைவர்கள், மகளிர் குழுக்கள், பணியாளர்கள் அனைவரையும் அணிதிரண்டு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இத்தினத்தன்று மருதனார்மடம் சந்தியில் பி. ப 2-00 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் ஊர்வலத்தில் பங்குபற்ற வசதியாக குறித்த நேரத்துக்கு முன்னதாக அனைவரும் வருகை தந்து ஊர்வலத்திலும் அதனை தொடர்ந்து நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் பங்குபற்றி ஒத்துழைக்குமாறும் வேண்டுகிறேன்;

அனைத்து ஒடுக்கப்பட்டவர்களையும்
அணைத்துச் செல்வோம்;

தலைவர்
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/7972)


6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரவேங்கை சாள்ஸ்
(குமாரகுலசிங்கம் வேலவன்)
(வாணிபக்ற பீலன் மாவிட்டபுரம்)

மலர்வு: 31 — 07 — 1967
வீரச்சாவு: 30 — 04 — 1988

பிரிவுத்துயர் பெரிது நீ பிரிந்த விதம் அரிது!
களிவுடன் உனை நினைக்கின்றோம்
கண்ணீர் மல்கி நிற்கின்றோம்
எமக்கே பெறுவோம் ஈழம்
எரிக்கு போடோம் தாளம்
பேணுவம் உன்பெயர்
பெரிதுவக்கோம் எம் உயிர்

உன் பிரிவால் வாடும்,
தாய். சகோதரர்கள்,
மச்சான், மச்சாள்மார், மருமக்கள்,
உற்றார். உறவினர்கள்
[30670]


உ
சிவமயம்
✻ சிவாச்சாரியாபிஷேக அழைப்பு ✻

நிகழும் மங்களகரமான பவ ஹூ சித்திரைத் திங்கள் 18 ஆந் திகதி (01 - 05 - 94) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி 9 நிமிடம் மேல் 10 மணி 21 நிமிடம் அளவில் வரும் மிதுன லக்கின
★ சுபமுகூர்த்தத்தில் ★

எமது கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
பிரம்மஸ்ரீ வை. ஸ்ரீமசுந்தரசர்மா
அவர்களுக்கு
(வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மாள் தேவஸ்தானம்)

எமது வாசஸ்தல இல்லத்தில் சிவாச்சாரியாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. சுற்றத்தார், உறவினர்கள், அன்பர்கள் யாவரும் சமுகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ [illegible] சிவாச்சாரியார்
அம்மன் கோவிலடி,
(30676)



உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்கள்
பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள்
சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள்
அனைவருக்குமான அறிவித்தல்

தயவுசெய்து எதிர்வரும் மே தினத்தன்று பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலத்தில் கோட்டரீ யாக அணிதிரளும் மக்களுடன் இணைந்து தவறாது பங்குபற்றும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உள்ளூராட்சி ஊழியர்களின் சங்கம்
பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் சங்கம்
சனசமூக நிலையங்களின் சமாசங்களும் சம்மேளனமும்

யாழ்ப்பாணம், 94-04-29 (சி/7973)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாகச் சேர்ந்த ஆயிரக்கணக்கான

# சிங்கள இளைஞர்களுக்கு வவுனியாவில் ராணுவ பயிற்சி

கொழும்பு, ஏப். 30 இராணுவத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஆயிரக்கணக் கான சிங்கள இளைஞர் களுக்கு, வவுனியா - ஈரப் பெரிய குளத்தில் இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பயிற்சியில் ஈடுபட் டுள்ள சிங்கள இளைஞர்கள் 30 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றும்—

வவுனியா, நொச்சிமோட் டையில் கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நொச்சிமோட்டை புதிய பாலத்துக்கு அருகில் உள்ள நீண்ட பாதைகளில் ஆயுத தளபாடங்களுடன் இராணுவ வாகனங்கள் மற்றும் கவச வாகனங்களும் நிறுத்தப்பட் டுள்ளன.

பல நூற்றுக்கணக்கான படையினர் பயிற்சி நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-எ)

## விற்பனையாகிறது!

ஆசிரிய நியமனம்பெற! அரசாங்க பரீட்சைகளில் சித்தியடைய!

1. பொது அறிவு
2. பொது உளச்சார்பு

ஆசிரியர்:
V. A. சிவராசா B. A. B. Phil
152B, அரசடிறோட். கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(30672)

தென்னிந்திய திருச்சபை - யாழ். ஆதீனம்

## சாவகச்சேரி தொழிற் பயிற்சி நிலையம்

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய நெறிகளில் பயிற்சி பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை காலை 9-00மணி முதல் மதியம் 12-மணிவரை பின்வரும் விலாசத்தில் பெற் றுக்கொள்ளலாம்.

'குரு இல்லம்'
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 05 - 1994

குறிப்பு:
கடைசியாக முடிவடைந்த பயிற்சி நெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது சான் றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

செயற்திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை,

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி/7940)

E. S. பேரம்பலம் சக நிறுவன
ஆதரவில்
## ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.
நடத்தும்
## ஒன்பதாவது வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி-1994

விண்ணப்ப முடிவு திகதி:-
09 - 05 - 1994 பிற்பகல் 5 மணிவரை

அணி ஒழுங்குத் தெரிவு:
11 - 05 - 1994 புதனகிழமை பி பகல் 4மணி
யாழ். இந்துக்கல்லூரியில்

விண்ணப்பப் படிவங்களையும் விதிகளையும்
கப்டன் என். சோமசுந்தரம்
(45, இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.)
அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

(சி/7959)

## திருநெல்வேலி, சண்டிலிப்பாயில் காற்றாலைகள்

யாழ்ப்பாணம், ஏப். 30 காற்று மூலம் குறைந்த செலவில் நீர் இறைக்க வசதி யாகக் காற்றாலைகளை திரு நெல்வேலி, சண்டிலிப்பாய் பகுதிகளில் அமைக்கும் வேலையில் தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவன சக் திப்பகுதியினரால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. (ஒ-எ)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

ஈராண்டுப்பகுதி
நேரப் பட்டப்பின்
கல்வித் தகைமை
கற்கைநெறி
1993/94

## புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலை களில் கடமையாற்றும் நிரந்தர பட்டதாரி ஆசிரி யர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண் ணப்பங்கள் கோரப்படு கின்றன. தேர்வு நாடிகள் 1994-05-27இல் 50 வயதுக் குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப் பங்களைப் பெறவிரும்பு வோர், நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற் றுச் சீட்டினைக் கல்விக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித் துப் பெற்றுக் கொள்ள லாம்.

எழுத்துத் தேர்வொன் றிற்கும் அதன் பெறுபேற் றின் அடிப்படையில் நடத் தப்படு நேர்முகத் தேர் வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண் டும்.

அனுமதிப் பரீட்சை 1994-07-24 அன்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத் தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படு வோர் 25 மைல் சுற்றாட லில் அமைந்துள்ள பாட சாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவா ளர், கல்விக்கிளை, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1994-05-27 ஆம் திகதிக்கு முன் அனுப் புதல் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம்.

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

# A/L 96

புதிய பிரிவு II
கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: 30 - 04 - 1994

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| இந்துசமயம் / இந்து நாகரீகம் | — | திரு. சோதி |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| தமிழ் | — | திரு குழந்தை |
| புவியியல் | — | திரு. வேலா |
| அரசியல் | — | திரு. நலம் |
| நாடகமும்அரங்கும் | — | திரு. சத்தியா |

அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்யவும்

## சட்டமும் ஒழுங்கும் இன்று நாட்டில் இல்லை

### ஆளுங்கட்சி முக்கியஸ்தர் கவலை

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு கிடையாது. அரசி யல் கொலைகள் பற்றி சரி யான முறையில் கடமை களைச் செய்ய முடியாதவ ராக இரகசியப் பொலீஸ் திணைக்களத் தலைவர் இருப் பின் அவரை அப்பதவியில் இருந்து அகற்ற வேண்டும்.

மேல் மாகாணத்தின் முன் னாள் முதலமைச்சரும் ஐக் கிய தேசியக் கட்சியின் உத விப் பொதுச் செயலாளரு மான கசில் முனசிங்க மேல் மாகாணசபைக் கூட்டத்தில் பேசியபோது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

படுகொலை செய்யப்பட்ட மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ரஸ்மர் ஹஸே னுக்கு அனுதாபம் தெரிவிக் கும் பிரேரணை மீது அவர் பேசினார்.

''நாட்டில் இன்று சட்டம், ஒழுங்கு என எதுவுமே கிடை யாது. நாட்டில் சட்டம் இருந்திருப்பின் இப்படு கொலை நடந்திருக்காது''— என்றார் அவர்.

மாகாணசபை உறுப்பினர் ஜனக மகிலிமராச்சி பேசிய தாவது:

''ஜனாதிபதி விஜேதுங்கா வின் கைகள் இரத்தக்கறை படியாதவை என்பது எமக் குத் தெரியும். ஆகவே அவர் பதவியேற்பதற்கு முன்பு இடம்பெற்ற கொலைகளுக்கு அவர் மீது குறை கூறமுடி யாது. அப்படியானால் லலித் அத்துலத்முதலியின் கொலை தொடர்பாக ஏன் நட வடிக்கை எடுக்கப்படவில்லை?

''யாரை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளது? யாருக்கு நாம் பயப்பட வேண்டியுள் ளது? இன்று அமைச்சர் ஒரு வரால் செய்ய முடியாத ஒன்றை காடையன் ஒருவன் செய்து விட்டுப் போகின் றான்'' — என்று அவர் கூறி னார். (த-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 03 — 01 — 1917



உதிர்வு: 31 — 03 — 1994

### திருமதி பூரணம் கந்தையாபிள்ளை


அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

திருப்பரம் குன்றம்,
17, பிரம்படி லேன்,
கொக்குவில்.

(30668)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### செல்லையா பேரம்பலம்

தோற்றம். 15-08-1928
மறைவு 30-04 1992

அன்புடனும், பண்புடனும் எம்மை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங் களை விட்டுப் பிரிந்தாலும் நாங்கள் உங்களை விட்டுப் பிரியாமல் என்றும் உங்கள் நினைவாகவே வாழ்கின் றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய மங்கும்பான் வெள்ளை - புற்றடி வீரகத்திப்பிள்ளையாரை அனு தின மும் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் என்றும் எங்களுடன் இருக்கின்றீர்கள் என்ற நம்பிக்கையில் வாழும்;
உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்:

52/2, லவமன் வீதி,
நல்லூர்.

(30666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒன்றரை மாதம் நிரம்பிய அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இல. 222, தெல்லிப் பளை வீதி, (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்) சித்தன் கேணி. (30645)

ஆங்கிலம், தமிழ் (புதிய, பழைய விசைப்பலகை) தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. 140 நாவலர் வீதி (மனோகராச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (7356)

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30649)

பிராமா, சிக்கி பேபிஸ், சிலம்பு பண்டம், பாபடிக்ஸ் பிறிசிக் குஞ்சுகளும், அடை வைக்கக்கூடிய முட்டைகளும் விற்பனைக்குண்டு. கிருஷ்ண பிள்ளை இராசேந்திரன் (அப்பன்), செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு (கோண்டாவில் சந்திக்கு அருகில்). (30665)

மூன்றரை அடி நீள மீன்தொட்டியும், மீன்தொட்டிக்குரிய மோட்டரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (30663)

குசன் செற்றி, அலுமாரி, கபேட் 21'' நஷனல் கலர் T. V., மேசைகள், கட்டில்கள் என்பன விற்பனைக்கு உண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (30662)

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் திருக்கணித நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீவிஷ்ணு முகவர், பிரதான வீதி, சாவகச்சேரி. (30627)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அகற்றி கூந்தலை மிகவும் அழகுடன் திகழவைக்கும். கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் (7303)

### மணமகன் தேவை

38 வயது விசாகம் 3ஆம் பாதம் கிரகபாவம் 55, ஜேர்மனி வீஸா யாழ் உள்ளவருக்கு அழகிய, படித்த பெண் தேவை. ப. பரராசசிங்கம், கோண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு. (30546)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை /வர்த்தகம்/ முகாமைத்துவம்

1ம் 2ம். 3ம், 4ம் கல்வியாண்டு இறுதிப் பரீட்சை - 1993

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 15-05-94 இற்கு முன்பாக [யாழ்/பல்கலைக்கழகம், பரீட்சைக் கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்தகட்டண பற்றுச் சீட்டுடன் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்கு பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

-பதிவாளர்

(சி/7957)

---

### காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் இளந்தென்னைகள் கிணறுடன் கூடிய நிலப்பரப்பு 10 குளி 12½. தொடர்பு: இ. ஜெயசிங்கம், சட்டத்தரணியும் சணிய அளவையாளரும் 36, சந்தனமாதா வீதி, பாண்டியன் தாழ்வு. (30658)

### கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பூசி போட்ட 9கிழமை நிரம்பிய Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30647)

### O/L கணிதம் - 94

Distinction, Credit பெறுபேறடைவதற்கு இதுவரையும் சித்தி அடையாதோருக்கும் ஆண்டு 9, 10 உட்பட கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc இல. 85, சிவன்கோயிலடி, திருநெல்வேலி. (30650)

## மாதாந்த இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப். 30

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று சனி மாலை 5 மணிக்கு சட்டநாதர் வீதி மன்றக்கலா மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சியில் பாட்டு, வயலினிசை, ''தியாகத்தாய்'' நாடகம், 'தியாக தீபம்' வில்லிசை ஆகியவை இடம் பெறும். (த-111)

## வல்வையில் வர்த்தக திணைக்கள கிளை

வடமராட்சி, ஏப். 30

வல்வை மக்களின் நலன் கருதி வல்வெட்டித்துறையில் நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு வர்த்தகத் திணைக்களத்தின் கிளை ஒன்று திறந்து வைக்கப்படுகிறது.

வர்த்தகத் திணைக்களத்தின் கணக்காளர் திரு ச. சுப்பிரமணியம் இதனைத் திறந்து வைப்பார். (த-173)

---

# கலை, வர்த்தக கல்லூரி

**C C A.**

வெலிங்டன் சந்திக்கருகில், யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம்**

## G. C. E. A/L 96

புதிய பிரிவு

**ஆரம்பம்: 30-04-1994**

சனி காலை 8மணி

பிரபல ஆசிரிய குழு:

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — திரு. இரட்ணம் |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் ] இந்து சமயம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — திரு. வேலா |
| தமிழ் | — திரு. தங்கராஜா |
| அரசியல் | — திரு. பஞ்சு |
| கிறிஸ்தவநாகரிகம் | — திரு. றோபேட் |

குறிப்பு:

1. மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்
2. பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற் கொண்ட ஆசிரியர்களின் இணைந்த சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்
3. பரீட்சை நுட்பங்களை அறிந்த ஆசிரியர்கள் இணைந்து கற்பிப்பதுடன் மாதாந்தப் போட்டிப் பரீட்சையும் நடத்தப்படுகின்றது
4. கலை, வர்த்தகத்தில் இன்று தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

- நிர்வாகி.

[இ-8058]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அருளப்பு மேரி மாகிறட்

மண்ணில்: 25-09-1923 விண்ணில்: 30-04-1993

''சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்''.

இவரது ஆத்ம சாந்திக்காய் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்!

- பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (30637)

---

## தென்னிந்திய திருச்சபை

யாழ் பேராயம்

# நம்பிக்கை இல்லம் (HOUSE OF HOPE)

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற, வலது குறைந்த [Physically Disabled] ஐந்து (5) வயதிற்கும், பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் குடும்ப விவரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர், தென்னிந்திய திருச்சபை;

ஆதீனக் காரியாலயம், வட்டுக்கோட்டை. (சி-7943)

---

காரைநகர் பாலாவோடை தந்த தவப்புதல்வன்

(26 — 04 — 1994 ஆம் திகதி இந்தியாவில் தமிழ் நாட்டில் இறைவன் அடிசேர்ந்த)

## வைத்திய கலாநிதி அ. வைத்தியலிங்கம்

அவர்களின் மறைவை யொட்டிய

# கண்ணீரஞ்சலி

சேவைக்காய் இறைவன் செதுக்கிய சிற்பம்
சேர்ந்ததா சிற்பியின் பாதம்
பூவுக்கா வாசம் பூமியின் மேலே
பூத்ததால் வைத்தியா நின்வாசம்
சாவுக்கா? வாழ்க்கைச் சமருக்கா? இல்லை
சகிக்காது தோழனின் உள்ளம்

நீ விட்ட வெற்றிடம் நீண்டதோர் கற்றடம்
நிறையுமா? நீளம் குறையுமா?
ஆ! பட்டு விட்டதா ஆலயத் தீபமே
அணையுமா அன்பு அறமா

நீ தொட்ட நோய்களும் நீறிய புண்களும்
நொடியிலே ஆறுமே தோழனே
நாதொட்டு நானுந்தன் நன்மையைக் கூறவே
(இந்) நாளுமே போதுமா நண்பனே!

உம் பிரிவால் துயருறும்
நண்பர்
செ. அம்பிகைபாகன் குடும்பம்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [30652]

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணை கிழக்கு

### செல்வி சரண்யா மாணிக்கவாசகர்

மனமகிழ்வூட்டி மலர்ந்தது: 26 — 09 — 1985

மனம்பரிதவிக்க உதிர்ந்தது: 30 — 04 — 1990

புத்திர சோகம் கொடிதெனும் அந்தத்
தத்துவம் அறிந்திருந்தேன் - ஆனால்
இத்துணை கொடிது அதுவெனும் உண்மை
இன்று(ன்)னால் புரிந்து கொண்டேன்
எத்தனை சொந்தம் சுகமிருந் தென்ன?
அத்தனை யும்உனக் கீடாகுமா? - உன்
சித்திர முகமும் சிரித்திடும் விழியும்
நித்தமும் காணும் நாள்வருமா?

என்றும் உனை மறவா
உன்பிரியமுள்ள!
அப்பா, அம்மா, தம்பி.
உறவினர்.

பண்ணார். [7354]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கவனந் தெரிதல் மிக அவசியம்

கொள்ளை லாபம் அடித்தல், பதுக்கல் மற்றும் வாணிப மோசடிகளில் வர்த்தகர்கள் ஈடுபடுவதால் பொதுமக்களுக்கு — பாவனையாளர்களுக்கு — உண்டாகும் பாதிப்புகளையும், சமூகக் கெடுதல்களையும் இப்பத்தியில் அவ்வப்போது தெளிவுபடுத்தியிருக்கிறோம் எனினும் எங்கள் பிரதேசத்தில் தொழில் செய்யும் வர்த்தகர்களில் சிலர், தமிழ் மக்கள் வாழும் சூழலையும், அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையும் உணர்ந்து செயற்படுவதாக இல்லை.

போர்க்காலச் சூழ்நிலையிலாவது தேசப்பற்றுடனும், சமூக உணர்வுடனும் தொழில் செய்யவேண்டும் என்ற மனதிருத்தம் உண்டாவதாக இல்லை. நிர்வாகத்தை ஏமாற்ற முனைவது மக்களை ஏமாற்றுவதாக முடியும்; அதன் விளைவு பாரதூரமாக முடியும் என்பதனைச் சிந்திக்கும் ஆற்றல் கூட வர்த்தகர்களில் சிலருக்கு இல்லாமற் போய்விட்டதோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து வருகிறது.

அரிசி விற்பனையில் வர்த்தகர்கள் சிலர் நடந்துகொண்ட விதம் — அரிசியை கொத்து அளவுக்கு கூடுதல் விலையில் விற்ற சம்பவங்கள் — மக்கள் நலன் நாடிய நடவடிக்கைகளைத் தங்களால் முறியடிக்க முடியும் என்று வாணிபர்கள் சவால் விடுவதாக அமைந்தன.

அரிசிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை கிலோ அளவுக்குத்தான்; கொத்து அளவுக்கு இல்லை என்ற காரணத்தை — ஓட்டையை — பயன்படுத்தி கூடுதல் விலைக்கு விற்றிருக்கிறார்கள். இது அரிசிக்கு விலை கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் நோக்கத்தை வேரோடு சாய்த்ததாகிவிடுகிறது.

வர்த்தகர்கள் என்போர் உற்பத்தியாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் இடையில் நின்று தொழில் செய்பவர்கள். இருசாராரையும் பாதிக்காத வகையில் தமது தொழிலைச் செய்ய வேண்டும் என்பதனை அவர்கள் உணரவேண்டும். அது தமது தேசியக் கடமை, தார்மீகப் பொறுப்பு என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

வர்த்தகம் சமூகத்தின் வாழ்க்கை நிலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக விளங்குகிறது. நிர்வாகமும், அதிகாரிகளும் மக்கள் நலன்நாடி எவ்வித நடவடிக்கையை மேற்கொண்டாலும், அதனை மீறும் விதத்தில் வர்த்தகர்கள் செயற்பட்டால் சமூக நலன் பாதிப்புறும். பல கலகங்கள் குழப்பங்களுக்குக்கூட வழி செய்யும். அப்போது வர்த்தகர்கள் எறியும் கல் அவர்களையே திரும்ப வந்து தாக்கும்; "பூமராங்" போல!

இதனை பகுத்தறிந்து கொள்ள முடியாதவர்கள் வர்த்தகத்தில் ஈடுபட எண்ணக்கூடாது. அவர்கள் தப்பித்தவறி அந்தத் தொழிலுக்கு வந்துவிட்டால் அவர்கள் களைந்தெறியப்பட வேண்டியவர்கள். தமது சுயலாபம் கருதி, வர்த்தக மோசடிகளிலும், ஊழல்களிலும் ஈடுபடுவோர் சுயதொழில் செய்பவர்கள் எப்பதால் அவர்கள் நினைத்தபாதிரி சமூகவிரோதிகளாக நடந்து கொள்ள அனுமதிக்க முடியாது; அனுமதிக்கவும் கூடாது.

அரசாங்கத்தின் பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை ஆகியவற்றாலும், இராணுவத் தாக்குதல்களாலும் வடபகுதி மக்கள் படும் கஷ்டங்களை தெற்கிலிருந்து வருபவர்களே நேரிற் கண்டு, மனக்கவலையும், கண்டனமும் தெரிவிக்கிறார்கள். அரசாங்கத்தின் நெருக்குதல்களை எதிர்கொண்டு வாழப்பழகும் அவர்களின் மனத்துணிவு கண்டு மலைத்துப்போய் விடுவோரும் உளர்.

வடபகுதி மக்களின் அந்தக் கஷ்டங்களுக்கு மேலதிகமாக, அவர்களின் தலைகள் மீது, அவர்களில் ஓர் அங்கமாக விளங்கும் உள்ளூர் வர்த்தகர்களே பாறாங்கற்களைச் சுமத்துவதை அனுமதிக்கக் கூடாது. அவர்களைச் சமூகத் துரோகிகளாகக் கருதிக் கடும் தண்டனை வழங்கவேண்டும். இல்லையேல் அவர்கள் சமூக வாழ்க்கையை அழித்து நாசமாக்கி விடுவார்கள். மக்கள் துரோகம் மன்னிக்கப்படக் கூடியதல்ல.

சோதனைக் களத்தில் மீண்டும் நரசிம்மராவ்

# 10 மாநிலச் சட்டசபைகளுக்கு நவம்பரில் தேர்தல் நடக்கும்

### பிரதமர் ராவின் சொந்த மாநிலமே கைநழுவிப்போகும் நிலையில்

புதுடில்லி, ஏப். 30

இந்தியாவின் பத்து மாநிலங்களின் சட்ட சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன.

ஆந்திர பிரதேசம் கர்நாடகம், மகாராஷ்டிரம், குஜராத், கோவா, பிஹார், ஒரிஸ்ஸா, மணிப்பூர், சிக்கிம் மற்றும் அருணாசலம் ஆகிய மாநிலங்களே அவையாகும்.

இவற்றில் ஆறு மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியில் உள்ளது.

இம்மாத முற்பகுதியில் நடந்த காங்கிரஸ் செயற்குழு மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் அமைப்புக்களின் முக்கிய பதவிகளுக்கு தேவையானவர்களை நியமிக்கவும் தேவையற்றவர்களை அகற்றவும் பிரதமர் நரசிம்மராவுக்கு பூரண அதிகாரத்தை வழங்கியுள்ளது.

ஆந்திரமாநிலம்

பிரதமர் ராவின் சொந்த மாநிலமான ஆந்திராவில், இந்திராகாங்கிரஸ் தோல்வி காணலாம் என்றும்—

கன்ஷிராம் தலைமையிலான பகுஜன் சமாஜக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடவுள்ள ராமராவின் தெலுங்கு தேசம் கட்சி மீண்டும் மாநில ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் இருப்பதகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக தெலுங்கு தேசம் கட்சியுடன் பகுஜன் சமாஜக் கட்சி கூட்டுச் சேராமல் பார்த்துக்கொள்ளும்படி பிரதமர் ராவ் தமது நெருங்கிய ஆலோசகர்களைப் பணித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கர்நாடகம்

கர்நாடகத்திலும், இந்திரா காங்கிரஸ் மாநில ஆட்சியை மீண்டும் கைப்பற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் சார்பில் மாநில முதலமைச்சராக இருந்த பின்னர் விலக்கப்பட்டவரான பங்காரப்பாவின் சொந்தக் கட்சியான கர்நாடக காங்கிரஸும் ஜனதா தளமும் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

இது இந்திராகாங்கிரஸின் வெற்றி வாய்ப்பை வெகுவாகப் பாதித்துள்ளதாகத் தெரிகின்றது.

கடந்த நவம்பரில் நடைபெற்ற வட இந்திய மாநில சட்டசபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் சுமாரான வெற்றியைப் பெற்றது. பிரதமர் ராவின் தலைமைத்துவம் காங்கிரஸில் நீடிக்க அது வழிவகுத்தது.

ஆனால் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் பத்து மாநில சட்டசபைத் தேர்தல்கள் பிரதமர் ராவின் தலைமைக்கு மீண்டும் ஒரு சோதனைக் களமாக அமையப் போவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (ந-எ)

## சுருக்கெழுத்தாளர் பதவி; வெற்றிடங்கள் நிரப்பமுடிவு

### பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 30

பொதுநிர்வாக அமைச்சு, அரச சேவையில் உள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்ப முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பகிரங்கப் பரீட்சையில் நியமனத்துக்கு வேண்டிய ஆகக் குறைந்த மொத்தப் புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

வெற்றிடங்களை நிரப்புவதற்கு தராதரம் பெற்ற விண்ணப்பதாரிகள் போதிய அளவு இல்லாத பட்சத்தில் — பகிரங்கப் பரீட்சையில் தேவையான புள்ளிகளைப் பெறாத, ஆனால் குறைந்த பட்சப் புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற விண்ணப்பதாரிகளை பயிலுநர்களாகத் தெரிவு செய்வது என்றும் அமைச்சு முடிவு செய்துள்ளது.

பயிலுநர்கள் அடிப்படைப் பயிற்சியைப் பெறுவதுடன், பயிற்சியின் பின்னர் இறுதிப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும்.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் தராதரம் பெற்ற விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாத பட்சத்தில் மாவட்ட விகிதாசார முறை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அடுத்த மாதம் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மகாபொல பரிசளிப்புவிழா இம்முறையும் இங்கு நடக்கும்

### 36 பேர் தெரிவாகியுள்ளனர்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். மாவட்டத்தில் இருந்து மகாபொல(1992/93) புலமைப் பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இம் முறையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மே 7ஆம் திகதி இவ் வைபவத்தை நடத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

புலமைப் பரிசில் வழங்குவதற்கான காசோலைகள் கொழும்பில் இருந்து இங்கு கிடைக்கப்பெற்றதும் குறித்த அவர் நாளில் அந்த வைபவம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

மகாபொல புலமைப் பரிசிலுக்கு இம்முறை தெரிவு செய்யப்பட்ட 36 மாணவர்களின் விவரம் வருமாறு:-

என். சுகுமார், ரி. நிமலரஞ்சன், செல்வி எஸ். சிவபாதம், செல்வி ஆர். யோகலிங்கம், ஜே. ஜே. ஜோர்ஜ், எச். ஆர். குணரத்தினம், செல்வி ஏ. குலராஜசிங்கம், கே. தேவகரன், செல்வி ரீ. சண்முகலிங்கம், செல்வி என். சாருலதா.

செல்வி எஸ். பாலசுப்பிரமணியம், செல்வி எம். சோமசுந்தரம், செல்வி வீ. ரூபவதி, செல்வி வீ. உலகப்பிரகாசம், செல்வி வீ. தமிழினி, எஸ். சங்கர், ரீ. தயாபரன், ஜீ. சுந்தரேசன்.

ரீ. சுதர்ஸன், ரீ. சேந்தன், செல்வி என். ஜெயவாணி, செல்வி ரீ. கௌதமி, செல்வி பி. சகுந்தலாவாணி, செல்வி எஸ். ராஜிதா, செல்வி ஜீ. ஏகவாணியம், செல்வி வீ. திருவருட்செல்வி.

செல்வி எஸ். மேனகா, செல்வி என். சிவப்பிரகாசம், செல்வி ரீ. டானியேல், பி. பகீரதன், செல்வி டபிள்யூ. ஏ. அன்ரனீற், செல்வி ரீ. தேவ்மினி, எஸ். தயாபரன், வீ. செபகுமார், செல்வி எஸ். சசிமதி, செல்வி கே. செல்வமலர். (ஒ-5)

## யேமனில் வன்முறைகள்; நூற்றுக்கணக்கானோர் பலி

### 30க்கு அதிகமான டாங்கிகள் அழிப்பு

யேமனிற் நாட்டின் ஜனாதிபதிக்கு விசுவாசமான படைகளுக்கும் உப ஜனாதிபதிக்கு விசுவாசமான படைகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப் படுகிறது.

வட யேமன் தென் யேமன் என இருந்த இரு நாடுகள் பின்னர் யேமன் என்ற பெயரில் ஒரு நாடாகியது.

இந்த நாட்டின் ஜனாதிபதி முன்னாள் வட யேமன் பிரஜை. உபஜனாதிபதி தென் யேமன் பிரஜை ஆவார்.

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக இருவருக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கடி இப்போது முழு அளவு யுத்தமாக மாறிவிட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற முதல் நாள் சண்டையில் 30க்கு அதிகமான டாங்கிகள் அழிக்கப்பட்டன.

உபஜனாதிபதிக்கு விசுவாசமான உதவிப் பிரதமர் படுகொலை முயற்சியில் இருந்து காயங்களுடன் உயிர் தப்பினார். எனினும் உதவிப் பிரதமரின் மூன்று மெய்ப்பாதுகாவலர்களும் ஜனாதிபதிக்கு ஆதரவான படையினரால் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-ஈ)

## வீதி விளக்குகள் மீண்டும் விஷமிகளால் சேதம்!

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வீதி விளக்குகளை விஷமிகள் மீண்டும் இரவுவேளைகளில் உடைத்து நாசப்படுத்தி வருவதாக யாழ். மாநகரசபை மின்சார பொறியியலாளர் வே. நவரத்தினராசா தெரிவித்தார்.

கடந்த 5 நாட்களில் மட்டும் 8விளக்குகள் உடைந்து நாசப் படுத்தப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இதுவரை 412 வீதி விளக்குகள் யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகளில் அமைக்கப்பட்டிருப்பதாகவும்—

மேலும் 200 வீதி விளக்குகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில் விஷமிகள் விளையாட்டாக வீதி விளக்குகளை உடைத்து, நாசப்படுத்தி வருவது கவலைக்குரியது என்றும் வீதி விளக்குகளைப் பாதுகாக்க அவ்வப் பகுதி பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (த-17)

## மேலதிக உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஏப். 30

கடந்த வருடம் அக்டோபர் நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான மேலதிக உணவு முத்திரைகள் 5—18 வயதுக்குட்பட்ட வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்காக— நல்லூர் பிரதேச செயலகத்தினால் கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன என்றும்—

இதுவரை அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மே 2ஆம் திகதிக்கு முன் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் படியும் நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (த)

## குறைந்தளவு மானவரே கணிதத்தில் சித்தி:

# கல்வி முறை வங்கி முறையில்; மாணவரின் தரம் வீழ்கிறது!

### கருத்தரங்கில் சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 30

"கற்பித்தல் என்பது கவனிப்புடன் ஆரம்பிக்கிறது. ஆனால் இன்று கல்விமுறை வங்கி முறையாக மாறிவிட்டது. ஆசிரியன் ஒரு வெறும் உரைஞனாக, பேசும் இயந்திரமாக மாறிவிட்டான். ஆசிரியனின் இந்நிலை மாற வேண்டும். அவர்கள் வைப்பு நிலையை மாற்ற வேண்டும்."

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா இவ்வாறு கூறினார்.

யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் கடந்த 25ஆம் திகதி நடத்திய முழுநாள் கருத்தரங்கில் "பிணி நீக்கக் கற்பித்தல்" எனும் பொருளில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கருத்தரங்கிற்கு திரு. க. குணராசா தலைமை வகித்தார்.

கலாநிதி ஜெயராசா மேலும் கூறியதாவது:

"அண்மையில் வெளிவந்த ஜி. சீ. ஈ சாதாரண பரீட்சையிலும் முன்னோடிப் பரீட்சையிலும் குறைந்த எண்ணிக்கையினரே கணித பாடத்தில் சித்தி அடைந்துள்ளனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் மொழி, கணித ஆகிய இரண்டு பாடங்களிலும் ஆழமான கவனம் செலுத்த வேண்டும். மொழியைப் போதிக்கும் ஆசிரியர்கள் உச்சரிப்பு, எழுத்து ஆகியவற்றில் அக்கறை காட்ட வேண்டும். சரியான தூண்டிகளைத் தெரிவுசெய்து தேவையற்ற தூண்டிகளைத் தவிர்க்க வேண்டும்.

மாணவர்களது [illegible] சளிப்பு, புலமைப் [illegible] யவற்றிலும் [illegible] பட வேண்டும்.

இன்றைய கல்விமுறைகள் மாணவர்களின் ஞாபகத் திறனைத் தான் அளவிடுகின்றன... கல்வி என்பது மிகச் சில மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பும் ஒரு பயிற்சியாக இன்று அமைந்துள்ளது. இந்த நிலை மாற வேண்டும் என்றார் அவர்.

மாணவர்களைத் தொழிற்பட வைப்பவனாக ஆசிரியன் செயற்பட வேண்டும். ஆசிரியருடைய கற்பித்தலின் மூலம் மாணவனுடைய அறிவியல் அமைப்பில் தாக்கம் ஏற்பட வேண்டும்.

கருத்தரங்கில் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி என். கே. எஸ். நாதன் "இன்றைய வகுப்பறையில் காணப்படும் பிணி: ஒரு கண்ணோட்டம்" [illegible] [illegible] வழங்கினார். [illegible] [illegible] உரை நிகழ்த்தினார்.

புலிகளின் குரல் வானொலியில்

30-04-1994
சனி இரவு
★ 8-01 — அறிவியற் கலசம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் — சொந்த வனம் பேணி சொந்தக் காலில் நிற்போம்.
01-05-1994
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை.

அணுகுண்டின் தந்தை என புகழப்பட்ட

## பிரபல அமெ. விஞ்ஞானி ரஷ்யாவுக்கு ரகசிய தகவல்

நியூயோர்க், ஏப். 30

அணுகுண்டின் தந்தை என புகழப்பட்டவரான அமெரிக்க விஞ்ஞானி றொபர்ட் ஒப்பன்ஹீமர் அணுகுண்டு தயாரிப்பது தொடர்பான விஞ்ஞான தகவல்களை முன்னாள் சோவியத் யூனியனுக்கு இரகசியமாக வழங்கி வந்தார் என்ற திடுக்கிடும் தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

சோவியத் யூனியன் அரசாங்கத்தில் முக்கிய உளவாளியாக இருந்த பவல் அனொலிவ் வெளியிட்ட புதிய நூல் ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்காக 1942ஆம் ஆண்டில் அணுகுண்டு தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த ஒப்பன்ஹீமரும் மற்றும் விஞ்ஞானிகளும், அணுகுண்டு தயாரிப்பதில் காணப்பட்டு வந்த முன்னேற்றங்களை சோவியத் யூனியனுக்கு அடிக்கடி அறிவித்து வந்தனர் என்றும் அந்த புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நியூமெக்ஸிகோ— லொஸ் அலமொஸ் நகரில் உள்ள விஞ்ஞான கூடம் ஒன்றில் ஒப்பன்ஹீமரும் மற்றும் விஞ்ஞானிகளும் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தனர். (த-எ)

## தென்னிலங்கையில் நடக்கும் 9 மேதினக் கூட்டங்கள்

கொழும்பு, ஏப். 30

இவ்வாண்டு மேதினத்தன்று ஒன்பது மேதினக் கூட்டங்களும் ஏழு மேதின ஊர்வலங்களும் நடைபெறவுள்ளன.

ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் மேதினக் கூட்டங்கள் முறையே பதுளை, கொட்டகலை, ஹட்டன் ஆகிய இடங்களில் நடைபெறும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் கொழும்பில் நடைபெறும்.

இலங்கைத் தொழிலாளர் கட்சி தனது மேதினக் கூட்டத்தை கொழும்பில் ஏ. ஈ. குணசிங்காவின் சிலைக்கு முன்னால் நடத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் மேதினக் கூட்டம் ஹவ்லொக் பூங்காவிலும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் கொள்ளுப்பிட்டியில் உள்ள அதன் தலைமையகத்திலும் நடைபெறவுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி மேதினமன்று மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிரார்த்தனத்துக்கு முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்திருப்பதாகவும்—

ஆனால் இம்முறை மேதினக் கொண்டாட்டங்களை நடத்தாது என்றும் அதற்கான குழுவின் தலைவர் ஜோன் அமரதுங்கா தெரிவித்தார். (ஒ-எ)

## வீதியில் சென்ற பெண்ணின் தாலிக்கொடி பறிபோனது

### புலோலியில் இரு இளைஞர் கைவரிசை

வடமராட்சி, ஏப். 30

வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் கழுத்திலிருந்த எட்டரைப் பவுண் தாலிக்கொடியை ஒரே சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அறுத்துக் கொண்டு மாயமாய் மறைந்துவிட்டனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை புலோலி கிராமக்கோடு-மருதங்கேணி வீதியில் நடைபெற்றுள்ளது.

புலோலிமேற்கைச் சேர்ந்த திருமதி நல்லதம்பி பொன்னம்மா (70வயது) என்பவரே தாலிக்கொடியை பறிகொடுத்தவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை தமிழ்ஈழ காவல் துறையில் புகார் செய்யப் பட்டுள்ளது (ஒ-173)

## யாழ். ஆஸ்பத்திரியில் பிணவாடை: மூக்கைப் பிடித்துக்கொண்டு பணிபுரியும் ஊழியர்கள்!

யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலைக்கு, சடலம் ஒன்று கொண்டு வரப்பட்டால் சில மணி நேரத்திலேயே பிணவாடை வீசத் தொடங்கிவிடுகிறது.

சவச்சாலை உள்ள பகுதியில் நடமாட முடியாத அளவுக்கு மூக்கைத் துளைக்கும் துர்நாற்றம் வீசுகிறது. விக்ரோறியா வீதியால் செல்வதானால் மூக்கை இறுக்கிப் பிடித்து சில நிமிடங்கள் மூச்சை உள்ளே இழுக்காமல் ஓட வேண்டும்.

சவச்சாலைக்கு அருகில் உள்ள இரத்த வங்கி மற்றும் மேல் மாடியில் உள்ள ஆய்வு கூடத்தில் பணிபுரியும் ஊழியர்களின் நிலைபோ பரிதாபகரமானது.

அவர்கள் மூக்கைப் பொத்திப் பிடித்துக் கொண்டு நிம்மதியின்றி வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலை.

சவச்சாலையின் குளிரூட்டிகள் இயங்காதிருப்பதலாலேயே சடலங்கள் அழுகி துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ 162)

## தள்ளினால் இயங்கும் செஞ்சிலுவை அம்புலன்ஸ்!

யாழ்ப்பாணம், ஏப் 30

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் மற்றும் வாகனங்கள் தள்ளியே இயங்க வைக்கப்படுகின்றன

செஞ்சிலுவைத் தொண்டர்கள் தினமும் அம்புலன்ஸை தள்ளி "ஸ்ராட்" செய்வதால் பெரும் சிரமம் அடைவதாக தெரிவித்தனர்

செஞ்சிலுவை வாகனங்களின் பற்றரிகள் காலாவதியாகி செயலிழந்து விட்டதாக செஞ்சிலுவை வட்டாரங்கள் தெரிவித்தன

இந்த நிலைமையால் சங்கத்தின் அவசரப் பணிகள் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-17)

## புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் முன்னணி பாடசாலைகளில் ஜனவரியில் சேர வாய்ப்பு

கொழும்பு ஏப் 30

ஐந்தாம் வருட புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவருக்கு ஜனவரி மாதத்திலேயே முன்னணிப் பாடசாலைகளில் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது இப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் முன்னணிப் பாடசாலைகளில் சேர்ந்து கல்வி பயில மூன்றாம் மாதங்கள் வரைகாத்திருக்க வேண்டியுள்ளது என்றும்

இது அவர்களின் கல்வியைப் பாதிக்கிறது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்தது

காட்டு மரத்தை வெட்டாதே - நம் நாட்டு வளத்தை அழிக்காதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

